பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

விற்பனையாகிறது!
ZOOLOGY
A/L 89 பரீட்சைக்குரிய
'MODEL
QUESTION
PAPER'
ஆசிரியர்:
R. ஈஸ்வரதாசன்
BSc (Cey)
B.M.C. முன்லேன்,
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை
ரூ2/50

விற்பனையாகிறது!
WORK OUT
PHYSICS
'A' LEVEL
ஆசிரியர்:
R. சத்தியசிலன் BSc
21, மணல்தரை லேன்
கந்தர்மடம். (யாழ்)

சுடர்: 4 சுக்கில ஸ்ரீ ஆடி மீ 10 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 21 (25 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 197

அதிகாரப்பரவல் பேச்சுக்கு அமைச்சர் குழு டில்லிக்கு?

நேற்றுத் திருமலையில் நடந்த மாநாட்டின் பின் திருப்பம்

— கொழும்பிலிருந்து உதயன் சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜூலை 25

அதிகாரப் பரவல் சம்பந்தமான புதிய திட்டம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, இலங்கை அமைச்சர் குழு ஒன்று, புதுடில்லிக்குச் செல்லலாம் என மிக நம்பிக்கையாக எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர்கள் திரு. எஸ். தொண்டமான், திரு. காமினி திசநாயக்கா, திரு. ரஞ்சன் விஜேரத்தின ஆகியோர் நேற்றுத் திருகோணமலையில், வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாளுடனும் அவரது மந்திரிகளுடனும் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இந்தப் புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது

கொழும்பிலிருந்து சென்ற மூன்று அமைச்சர்களும் நேற்று திருகோணமலை மாகாண சபைக் கட்டடத்தில் முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாளைச் சந்தித்து அதிகாரப் பரவலாக்கல் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினர்.

பிரஸ்தாப பேச்சுக்கள் ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவின் பணிப்பின்பேரிலேயே நடைபெற்றன என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசியல் அமைப்புக்கான 13ஆவது திருத்தம் தமிழ்க் குழுக்கள் எதனுடனும் பேச்சு நடத்தியோ, அல்லது அவற்றின் இணக்கத்துடனோ மேற்கொள்ளப்படவில்லை. எனவே அதிகாரப் பரவலாக்கத்திற்கு இது போதாது; ஆதலால் புதிய சட்டம் ஒன்று தேவை என்று திரு. வரதராஜப்பெருமாள் கோரினாராம்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட திரு. ரஞ்சன் விஜேரத்தின இதற்கான சில முன்மொழிவுகளையும், ஆலோ

(6 ஆம் பக்கம் பார்க்க)

திருமலை பேச்சுக்கள் பற்றி ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25

நேற்று திருகோணமலையில் அமைச்சர்கள் குழுவுடன் மாகாணசபை முதலமைச்சரும் மற்றும் அமைச்சர்களும் நடத்திய பேச்சுக் குறித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விவரங்கள் வருமாறு:-

மாற்று இயக்கம் ஒன்றிற்கு அரசு தொலைதொடர்பு சாதனங்கள் மூலமாக கொடுக்கும் முக்கியத்துவம் சம்பந்தமாகவும், கடந்த சில தினங்களாக நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாகவும், வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கும். வட, கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பி

(6 ஆம் பக்கம் பார்க்க)

மின் விநியோகத் தடை 3 வாரங்களுக்கு நீடிக்கும்?

கொழும்பு, ஜூலை 25

வடபகுதிக்கான மின்சார விநியோகம் மேலும் மூன்று வாரங்களுக்குத் தடைப்படக்கூடும் என்று கொழும்பில் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாதம் 13 ஆம் திகதி மாலை, ஹபரணைக்கும் உக்குவல்லைக்கும் இடையில் உள்ள 51 ஆம் 52 ஆம் இலக்க மின் கோபுரங்களைத் தீவிரவாதிகள் தகர்த்தனர்; அதனைத்தொடர்ந்து வட பகுதிக்கான மின்சார விநியோகம் முற்றாகத் தடைப்பட்டது.

சேதமடைந்த அந்த மின் கோபுரங்களைத் திருத்தும் வேலைகள் நடந்துகொண்டிருந்த வேளையில் நேற்று முன்தினம் அனுராதபுரத்துக்கும் மதவாச்சிக்கும் இடையில் இருந்தஇரண்டு மின்கோபுரங்கள் தகர்க்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்தே மேலும் மூன்று வாரங்களுக்கு வடக்குக்கு மின்சார விநியோகம் கிடைக்கும் சாத்தியம்

(6ஆம் பக்கம் பார்க்க)

இன்று ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வடக்கில் இன்று செவ்வாய்க்கிழமை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அழைப்பை ஏற்கனவே, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) விடுத்திருந்தது.

1983ஆம் ஆண்டு ஜூலையில் வெலிக்கடைச் சிறையில் 53 தமிழ்ப் போராளிகள் கோரமான முறையில் கொலை செய்யப்பட்டதை நினைவு கூரும் வகையில் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது. (ஒ)

"புளொட்டும்" அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள் தினமான இன்று 25ஆம் திகதி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

விடுதலை அமைப்புக்களுக்கிடையில் நிலவிவரும் முரண்பாடுகளும் கருத்து மோதல்களும் கைவிடப்படவேண்டும் என்றும் தமிழீழப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல சகல அமைப்புக்களும் முன்வரவேண்டும் என்றும் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

முச்சந்தி முரளி



அரசியல் புயலை விடப் பயங்கரமாய்ப் போச்சுது போலை திஹாரியப் புயல்...!

2 பொலீஸார் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 25

மொறட்டுவவில் உள்ள லக்ஸபதிய என்ற இடத்தில் சனிக்கிழமை காலையில் டெலிக்கா வான் ஒன்றில்வந்த சிலர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அதன் விளைவாக 2 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

(அ.உ-9)

குருநகர் புனித யாகப்பர் திருநாள் இன்று

குருநகர், ஜூலை 25

குருநகர் புனித யாகப்பர் ஆலய திருநாள் இன்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

காலை 7 மணிக்கு அமலமரித் தியாகிகளின் யாழ் மறைமாவட்டத் தலைவர் வண. லூயிஸ் பொன்னையா அடிகள் தலைமையில் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மாலை 5 மணிக்கு புனிதரின் திருச்சொரூப ஊர்வலம் நடைபெற்று, பங்குத்தந்தை வண. பிதா பி.எம். இம்மனுவேல் அடிகளாரால் திருச்சொரூப ஆசீர்வாதத்துடன் நவநாள் கொண்டாட்டங்கள் நிறைவுபெறும்.

(சிறப்பிதழ் 4ஆம் பக்கத்தில்)

(ஓ-51)

ஸ்ரீ லங்கா படையினரின் 'சென்றி'களில் ஜவான்கள்!

கோட்டையில் இந்த மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ் கோட்டை இராணுவ முகாமில் ஸ்ரீ லங்காப் படையினர் இருந்த சென்றிகளில் தற்பொழுது இந்திய ஜவான்கள் காவற் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது.

ஏற்கனவே, கோட்டை இராணுவ முகாமுக்குள் இந்தியப் படையினர் காவல் கடமையில் ஈடுபட்டுள்ள போதிலும், கோட்டையின் மேற்பகுதியில் ஸ்ரீலங்காப் பொலீஸாரே காவலில் ஈடுபட்டு வந்தனர்.

(ஓ-10)

சுபநேரம்

25—07—1989

ஆடி 10— செவ்வாய்க்கிழமை

நக்ஷத்திரம்: ரேவதி, அச்சுவினி

சுபநேரம்:

10.32 முதல் 12.02 வரை

ராகுகாலம்:

03.02 முதல் 04.32 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

அமைதிப் படைத் தளபதி 29 வரை வடக்கு - கிழக்கில்

புதுடில்லி, ஜூலை 25

இந்திய அமைதிப்படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இம்மாதம் 29ஆம் திகதி வரை தங்கி இருப்பார்

அதற்குப் பின்னரும் தேவை ஏற்படின் அவர் தங்கி இருப்பார்.

இலங்கை அரசுக்கு தனது நிலையை தெளிவு படுத்தவே லெப்டினன்ட் ஜெனரல் கல்கத்தை நீடித்த நாட்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தங்கி நிற்கும்படி இந்திய அரசு பணித்துள்ளது.

இந்தியாவின் நிலையில் எதுவித மாறுதலும் கிடையாது என்பதை கல்கத்தின் விஜயம் புலப்படுத்தும் என்று இந்திய அரசு வட்டாரங்கள் கருதுகின்றன.

ஜனாதிபதி பிரேமதாஸா கடைசியாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்த கடிதம் இந்திய அரசுக்கு மறைமுக எச்சரிக்கை விடுப்பதாக அமைந்திருப்ப

(6ஆம் பக்கம் பார்க்க)

புயல் காற்றினால் முஸ்லிம் கிராமம் பாதிப்பு

3 பேர் பலி; 100வீடுகள் சேதம்

கொழும்பு, ஜூலை 25

கம்பஹாவில் உள்ள நித்தம்பொல என்ற இடத்தில் நேற்று பலத்த புயல் காற்று வீசியது.

கொழும்பு - கண்டி வீதியில் உள்ள முஸ்லிம் கிராமமான திஹாரிய இந்தக் காற்றினால் பாதிக்கப்பட்டது.

புயலின் விளைவாக பிரஸ்தாப கிராமத்தில் 100க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. மூவர் கொல்லப்பட்டனர். 15 பேர் படுகாயமடைந்தனர்.

புயல் காற்றுக்கு, திடீர் என்று உண்டாகிய பவன அமுக்கமே காரணம் எனச் சொல்லப்பட்டது.

புயல் காற்று நுவரெலியா மற்றும் மலையகத்தையும் தாக்கியது. (அ-உ-9)

பத்திரிகைத் தணிக்கை நேற்று முதல் நீக்கம்

கொழும்பு, ஜூலை 25

பதினெட்டு தினங்களாக அமுலில் இருந்த பத்திரிகைத் தணிக்கையை அரசு நேற்று முதல் நீக்கிவிட்டது.

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தின நேற்று பத்திரிகை ஆசிரியர்கள் கூட்டம் ஒன்றை கூட்டி இதனை அறிவித்தார்.

கடந்த 6 ஆம் திகதி பத்திரிகைத் தணிக்கை அமுலுக்கு வந்தது.

தணிக்கை முறை ரத்துச் செய்யப்பட்டாலும், பத்திரிகைகள் பொறுப்புணர்ச்சியுடன் தீவிரவாத சம்பவங்கள் மற்றும் அமைதிப்படை விலகல் பற்றிய செய்திகளை வெளியிட வேண்டும் என்று பத்திரிகை ஆசிரியர்களை அமைச்சர் கேட்டுக்கொண்டார். (ஓ-எ)

பிரேமாவின் கடிதங்களுக்கு இன்னும் பதில் இல்லை!

புதுடில்லி, ஜூலை 25

சிறப்புத்தூதர் பி. ஜி. தேஷ்முக் மூலம் ஜனாதிபதி பிரேமதாஸா அனுப்பிய கடிதத்திற்கு இந்தியா இன்னமும் பதில் அனுப்பவில்லை.

இதனிடையில் கடைசியாக திரு. பிரேமதாஸா அனுப்பிய கடிதத்திற்கும் இந்திய அரசு பதில் அனுப்பவில்லை.

இக்கடிதங்களுக்கு ஏன் பதில் அனுப்பவில்லை என்று கேட்டதற்கு இக்கடிதங்களில் புதிதாக ஒன்றுமே தெரிவிக்கப்படவில்லை என்று புதுடில்லியில் வெளியுறவு வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் அதிகாரப்பரவலாக்கல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சி எம். பிக்கள் 74 பேர் நேற்று ராஜினாமா!

தி. மு. க. வினரும் இதில் அடங்குகின்றனர்

புதுடில்லி, ஜூலை 25

இந்திய எதிர்க்கட்சி எம். பிக்கள் 74 பேர் நேற்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் தங்கள் ராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பித்தனர்.

நேற்று நாடாளுமன்றம் கூடியதும் தெலுங்கு தேசம் கட்சி எம். பி. மாதவரெட்டி எழுந்து பதவி விலகல் பற்றிய அறிக்கை ஒன்றை வாசிக்க ஆரம்பித்தார். அதற்கு சபாநாயகர் பல்ராம் ஜாக்கர் அனுமதியளிக்க மறுத்துவிட்டார்.

அதன் பின் மாதவரெட்டி தனது ராஜினாமாக் கடிதத்தை செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தனர். தொடர்ந்து சபையில் இருந்த எதிர்க்கட்சி எம். பிக்களும் பதவி விலகல் கடிதங்களைச் சமர்ப்பித்தனர்.

இராஜினாமாச் செய்தவர்களில் தி. மு. கவைச் சேர்ந்த எம். பிக்களும் உள்ளனர் என்று சபாநாயகர் அறிவித்தார்.

முஸ்லிம் லீக், அ. தி. மு. க. எம். பிக்கள் ராஜினாமாச் செய்யவில்லை. அகாலிதள் எம். பிக்கள் நாடாளுமன்றத்துக்கு வரவில்லை.

போபேர்ஸ் பேர ஊழல் சம்பவம் தொடர்பாக பிரதமர் ராஜீவ் ராஜினாமா செய்ய மறுத்ததை ஆட்சேபித்தே 12 எதிர்க்கட்சிகளும் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளன. (ஓ-எ)

கண்டியில் குண்டு வெடிப்பு

கொழும்பு ஜூலை 25

கண்டியில் உள்ள மகலம் புத்தக சாலைக்கு அண்மையில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

நேற்றுப் பிற்பகல் 5 மணிக்கு இடம் பெற்ற இச்சம்பவத்தில் 8 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 4 பேர் ஆண்கள் 4பேர் பெண்கள். (அ-உ-9)

நெல்லியடியில் நேற்றும் ஷெல் வீச்சு

கரவெட்டி ஜூலை 25

நெல்லியடியில் கொடிகாமம். யாழ்ப்பாணம் வீதிகளில் நேற்று நடந்த அசம்பாவிதங்களை அடுத்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சேத விவரங்கள் தெரியவரவில்லை. (ஓ-70)

பொலன்னறுவையில் கண்ணிவெடி; 6 பேர் பலி!!

பொலன்னறுவையில் உதவி பொலீஸ் அதிபர், அவரது மகன், நான்கு பொலீஸார் ஆகியோர் சென்ற ஜீப் ஒன்று கண்ணிவெடியில் சிக்கியது.

அப்போது 6 பேரும் கொல்லப்பட்டனர்.

ஜே. வி. பி. இயக்கத்தினரே இதற்குப் பொறுப்பு என்று தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் கண்டியில் நேற்று 9பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. என்று மற்றும் ஒருசெய்தி தெரிவித்தது. (இ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

க. பொ. த உயர்தர பரீட்சைக்கான உயர்தரக் கணக்கியல் செய்முறைப் பயிற்சி கம்பனிப் பகுதிகளை உள் அடக்கியது: சி. யோகேஸ்வரன்: கிடைக்குமிடங்கள், ஸ்ரீலங்கா புத்தகசாலை, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (1303)

புதிய C. G. 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். Dr. சிவசுப்பிரமணியம், பெரிய ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம். (1314)

ஆசிரியர்களுக்கான விண்ணப்பபடிவம் பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு:- கனன் பேட்டோ கொப்பிங் சேவிஸ், மணல் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை. (1316)

கோழிக்குஞ்சு விநியோகம்
UPLANDS FARM

(DEKALB) பிறவுண் பேடு சேவல் (COBB) புரொயிலர் குஞ்சுகள் (26 - 7 - 89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3/50) உடன் பதியவும்: இல. 9, கந்தையா லேன், சுன்னுகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) குறிப்பு:- இரவில் குஞ்சுகளுக்கு லைட் அவசியமில்லை. (1309)

கோழிக் குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hyline வெள்ளை கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து, ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1052)

மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து குருகுலம் (கரையார்இன) 8இல் செவ்வாய்க்குற்றம் சாதாரண சாதகமும் பொருந்தும் 30 வயது மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை, போதிய சீதனம் தரப்படும். மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (1319)

யாழ்ப்பாணம் வேளாளகுல செவ்வாய்க் குற்றமில்லாத 30 வயது நிரம்பிய சித்த ஆயுர்வேத வைத்தியர் பெண்ணுக்கு தகுதி வாய்ந்த நிரந்தர உத்தியோகத்திலுள்ள வேளாளகுல நற்குணமுடைய மணமகன் தேவை. தொடர்பு: தி. இராசையா, நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில். (11612)

மணப்பெண்கள் தேவை

யாழ் இந்து வேளாள செவ்வாய்க்குற்றமுள்ள 35 வயது ரெக்னிக்கல் மெக்கானிக்குக்கும் ஜேர்மனியால் வந்த 28 வயதுள்ளவருக்கும் வேளாள 38 வயது சுத்தோவிக்க வாப் கிளாக்குக்கும் 32 வயது எக்கவுண்டனுக்கும் இந்து 36 வயது டொக்டருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (11599)

SPOKEN ENGLISH

Spoken English புதிய பிரிவு செவ்வாய் வியாழன் நாட்களில் பிற்பகல் நேரம் 3/30 — 5 மணி, ஆரம்பம் 25-07-89 தொடர்பு: S, B Iyar, 12 வைமன் வீதி, நல்லூர் (11609)

Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3034)

நிரு ரியூசன் சென்ரர்
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்

89 ஆம் ஆண்டுக்கான கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்களும் 5 ஆம் ஆண்டுக்குரிய புலமைப்பரிசில் வகுப்புக்களும் பரீட்சையை முன்னிட்டு 26-07-89 இல் ஆரம்பமாகின்றன.

நிர்வாகி
(1275)

---

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
20-5-1954

●

ஆண்டவன் அடியில்
25-7-1983

சிவசுப்பிரமணியம் சிவநாதன்

குடும்பத்தின் குலவிளக்காய் எல்லோருக்கும் இனியவனாய் வந்துதித்த மலரே! தாய்க்குத் தலை மகனாய் வீட்டுக்கொரு தலைவனாய் வந்த நிலவே. நீ எங்கே சென்றாயடா? பட்டமரமாகி, பசுந்தளிர் எதுவுமின்றி தவிக்கின்றோமடா! இதயத்தின் துயரத்தை எழுதி வைக்க ஏடில்லை. உன்னை இழந்த துன்பம் மறையவில்லை! காத்திருந்ததெல்லாம் காற்றோடு போனதடா! உன்னை நினைத்து ஆலையில் இட்ட கரும்பைப்போல் தவிக்கின்றோமடா!

என்றும் உன்னை நினைந்துருகும்
**தாய், சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.**

வேலணை மேற்கு,
வேலணை 8.
(1262)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திரு. குமாரு செல்வராஜா
(ஆண் பரிசாரகர், ஊறணி அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை)

தோற்றம்: 14- 10- 1941
மறைவு: 04- 08- 1988

அன்புத் திருவுருவே! நீர் அழியாத கோலங்கள் காட்டி எம்மை அழவைத்து ஆண்டு ஒன்று பறந்தாலும் உமது நினைவை ஜீரணிக்க முடியாமல் தவிக்கின்றோம் தரணியிலே!

ஆண்டு பல ஆனாலும் அழுது நெஞ்சம் ஓயாதப்பா! மனைவியுள்ளம் தவிக்குதம்மா! உம் நினைவலைகள் மாறாமல் சோதரரும் சோர்ந்துவிட்டார் உன் சொந்தம் விட்டுப் போனதென்று! உறவினரின் ஒப்பாரி ஓயவில்லை உம் நினைவால்! அனைவரும் சேர்ந்து உமக்குச் சாத்துகின்றோம் கண்ணீர்ப் பூக்கள்! உமது ஆன்மா சாந்திபெற வேண்டுகிறோம் இறைவனிடம்!

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, சகோதரர்கள்,
உறவினர்கள்.

உடுப்பிட்டி.
(11610)

கேள்வி அறிவித்தல்

**மாவட்ட கல்வித் திணைக்களம், வவுனியா
கல்விப் புனருத்தாபனத் திட்டத்தின் கீழ்
வவுனியா மாவட்டப் பாடசாலைகளின்**

கட்டிட வேலைகள்

கீழ்க் குறிப்பிடப்பெற்ற பாடசாலைக் கட்டிட வேலைகள் சம்பந்தமான கேள்விகள் 1989 - 08 - 23 ஆம் திகதி காலை 10.00 மணிவரையும், கேள்விப் பத்திரங்கள் வழங்கல் 1989 - 08 - 15 ஆம் திகதி காலை 10-00 மணி வரை நீடிக்கப் பெற்றுள்ளதென்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. வ/நொச்சிமோட்டை அ.த.க பா. — பெருந்திருத்த வேலைகள்
2. வ/கல்நாட்டினகுளம் அ.த.க.பா — மேற்படி
3. வ/சிறிசுமண ம.வி — மேற்படி
4. வ/மரதம்மடுவ அ.சி.க.பா — மேற்படி
5. வ/தர்மபால ம.வி. — மேற்படி
6. வ/சிறிசுமண ம.வி. — மேற்படி

ஜீ. சிவபாலன்,
பாடசாலைக் கட்டிடப் பொறியியலாளர்,
(பிரதிக் கல்விப் பணிப்பாளருக்காக, வவுனியா).

கல்வித் திணைக்களம்.
வவுனியா. 1989. 07. 20
(சி/2915)

---

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம்:
12 - 12 - 1939

●

அஸ்தமனம்:
25 · 07 · 1983

அமரர் தாமு. கந்தையா
(புத்தூர்)

அடித்தனத்தை அலமத்தவற் கோ அயராது
கைகொடுத்தாய்.
ஆரம்பப் பங்களிப்பில் முதலாக நீ நின்றாய்.
நீரூற்றி விதைத்துவைத்த ஈழவிதை இந்தமண்ணில்
வேரூன்றி மாவிருட்ச மாய்வளர்ந்து விட்டதண்ணா!
சொல்வறுமை கொடுமை நிலை அத்தனையும்
ஏற்றுநின்றாய்.
இல்லறத்தில் இருந்துவந்து வெலிக்கடைக்கு
விருந்தானாய்.
பொல்லாதார் கொடுமை இன்னும்கொஞ்சமண்ணை
விட்டுவையோம்
மெல்லமெல்ல எங்களினம் இந்நிலத்தை
ஆளவைப்போம்.

—நண்பர்கள்,

புத்தூர்.
(1276)

---

111 ஆம் நாள் நினைவஞ்சலி
(25-07-1989)

அன்னை மடியில்
17-07-1966

♣ ♣ ♣

கடலின் அடியில்:
06-04-1989

சண்முகவேள் - பிரணவரூபன்

நினைவலைகள் பின் தொடர நெடுந்தூரம் எமைவிட்டு
தொழில் தேடிச் சென்ற மைந்தா - பிரணவா உன்
கனவுகளும், நினைவுகளும் கவின்பெறு நின் உடலதுவும்
- கடலோடு சங்கமித்த
கதையறிந்து கலங்கினோம் வெதும்பினோம் - புலம்பினோம்
- கேட்டதுவோ உன் செவிக்கு?
தொடரலைகள் கொண்ட கடல் உன் உடல் கொண்டு
சென்றதுவோ?
இல்லை! இல்லை!!
நினைவலைகள் எமை வாட்டும் போதெல்லாம்
எமது விழி சொரியும் நீர்
கடல் வெள்ளம் போல் ஆங்கு தேங்கி நிற்க - அதிலுந்தன்
உடலுருவம் தோன்றுதையா!! உருகுகின்றோம்
உனை நினைந்து!
உன் ஆத்மா சாந்திக்கு இறைவனை வேண்டி நிற்கும்:

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.
நண்பர்கள்.

மயிலங்காடு,
சுன்னுகம்.
(1117)

ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி சரஸ்வதி சோமசுந்தரம்
(Beloved wife of Mr Somasundaram, Retired Railway Guard)

தோற்றம்: 04- 02 1921
மறைவு: 05- 08- 1988
திதி: 25 07- 1989

அன்பின் விளக்காயமர்ந் தெங்கள்
அகல்விளக்காய் நிலைத்திட்டாய்!
பொறுமை யிருந்து கோடி
புண்ணியங்கள் செய்திட்டாய்!
கருணை மிக்க கணவன் தன்னை
கைப்பிடித்து மக்களாறை
கந்தன் முகக்கணக்கில் பெற்றிட்டாய்!
மாண்புடனே எம்மவரை
வாழவைத்த மாதா நீ!
மறைந்ததினலெம் துயரம்
மாறாது வாடுகின்றோம்!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புள்ள
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்:

ஸ்ரீ விக்னேஸ்வர வீதி,
அச்சுவேலி.
(சி/3094)

---

31 ஆம் நாள் நினைவு மலரும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி ஞானசேகரம் சிவமணி
(மலர்)

தோற்றம்: 18. 01. 1962
மறைவு: 26 06, 1989

எங்கள் குல விளக்கு! அன்பின் தெய்வம்!!

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொள்ள இறை பாதம் நாடிச் சென்று விட்டீர்கள்! நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு எம் இதயத்தை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு 26. 07. 1989 புதன்கிழமை நடைபெறும் அத்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக தியானம் செய்யுமாறு அழைக்கின்றோம்.

இப்படிக்கு:
கணவர், அம்மா, அப்பா,
மாமா, மாமி, மற்றும்
குடும்பத்தவர், உறவினர்கள்.

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.
(1189)

பொய்யாமொழி

குறள்:

உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

பொருள்:

உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று, பொருந்தத்தக்க பண்பால் ஒத்திருத்தலே கொள்ளத்தக்க ஒப்புமையாகும்.

உதயன்

இல. 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 4805
22073
யாழ்ப்பாணம்.
25 - 07 - 1989
த. பெ. இல. 23

கறுப்பு ஜூலை நினைவு

இன்று ஜூலை மாதம் இருபத்தைந்தாம் திகதி. இந்த நாள் ஈழத் தமிழர் அரசியல் வரலாற்றில் மறக்கப்பட முடியாத தினம். தமிழர்களின் வருடாந்த துக்கதினம். 1983 ஆம் ஆண்டு 25 ஆம் திகதி, தென்னிலங்கைப் பகுதிகளில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக, மிகப்பெரிய அளவில் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

தமிழர்கள் மிகவும் காட்டுமிராண்டித்தனமாக, கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள். இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்களின் உயிர்கள் படுபாதகமான முறையில் பறித்தெடுக்கப்பட்டன. தமிழர்களைக் கண்டால் தலையைக் கொய்வது என்ற இரத்த வெறி. இன வெறி கோரத் தாண்டவம் ஆடியது. தமிழர்களின் இரத்த ஆறு பெருக்கு எடுத்து ஓடியது. அவர்கள் ஆண்டுகள் பலவாகக் கஷ்டப்பட்டுத் தேடிய உடைமைகள், சொத்துக்கள் சூறையாடப்பட்டன; அழித்து நாசம் செய்யப்பட்டன.

அவற்றுக்குப் புறம்பாக, உலகத்தில் எங்குமே நடந்ராத வகையில், தென்னிலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் — அவர்களில் மிகப் பலரும் விடுதலைப் போராளிகள் — மிருகத்தனமாகக் குத்திக் குதறிக் கொலை செய்யப்பட்டனர்.

இந்த அநாகரிக அனர்த்தங்கள், 1983 ஜூலை வன்செயல்களுக்கு கறுப்பு ஜூலை என்ற அடைமொழிப் பதத்தைச் சர்வதேச ரீதியாகப் பெற்றுக் கொடுத்தன. அதனால் இலங்கைக்கு உலகளாவிய ரீதியில் அவமானமும், அவமதிப்பும், அபகீர்த்தியும் ஏற்பட்டன.

இனவெறி கோரத் தாண்டவம் ஆடுவதற்குத் தூண்டுதலும் மறைமுக ஆதரவும் நல்கிய சக்திகள் கூட, பின்னர் தமது தவறை உணரும் அளவுக்கு, கழிவிரக்கம் காட்டும் நிலைக்கு, கறுப்பு ஜூலை சர்வதேச மட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது.

எனினும், தென்னிலங்கை வாழ் மக்களும், அவர்தம் அரசியல் தலைவர்களும், கறுப்பு ஜூலைக்குப் பிராயச்சித்தம் செய்யும் அளவுக்குத் தம்மை இன்னும் பக்குவப்படுத்திக் கொள்ளவில்லை. ஆண்டுகள் ஆறு கழிந்து விட்ட போதிலும், தமிழர் விவகாரம், இனப்பிரச்சினை இன்னும் முற்றாகத் தீர்க்கப்பட்டதாக இல்லை.

தமிழர்களும் ஓர் இனத்தவர், மனிதர்கள். அவர்களுக்கும் ஜீவாதார உரிமைகள், வாழும் உரிமைகள் உள்ளன. அவர்களுக்கென பிரதேச உரிமை மற்றும் மொழி, கலாசார, மத உரிமைகள் உள்ளன அவற்றை அவர்கள் அனுபவிப்பதைத் தடுக்கக்கூடாது. தங்கள் தலைவிதியையும், விவகாரங்களையும் தாமே நிர்ணயிக்கவும், கையாளவும் அவர்களும் உரித்துடையவர்கள். அவர்கள் ஆளப்படும் இனமாக — அடிமைகளாக — அன்றி ஆளும் இனமாக வாழ்ந்து அனுபவிக்க உரித்து உடையவர்கள்.

— என்ற இந்தச் சிறிய விடயத்தைச் சிங்கள மக்களும், அவர்களின் அரசியல் தலைவர்களும், இடைப்பட்ட அதிகாரிகளும் உணர்ந்துகொள்ள மறுக்கிறார்கள். புரிந்தும் புரியாதவர்களாகத் தயங்குகிறார்கள். தமிழர்களின் உரிமைகளை வழங்குவது தமது உடலில் இருந்து கிள்ளிக்கொடுக்கும் இரத்த, தசை இழப்பாகக் கருதுகிறார்கள்.

இந்த நிலையை அவர்கள் மாற்றிக்கொள்ளாதவரை, சகோதரத்துவ, சகவாழ்வைச் சகித்துக்கொள்ளும் மனப்பக்குவம் அடையும்வரை இனப்பிரச்சினை இழுபடும் விவகாரமாகவே தொடரும்.

அவர்களிடம் உணர்வுபூர்வமான, உண்மையான, மனப்பக்குவம் இல்லாத குறைபாடே தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு அடி எடுத்துக்கொடுத்தது: அவர்களின் விட்டுக்கொடுக்காத தன்மையே தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை வலுப்படுத்தியது.

கடந்த ஆறு வருடங்களில் தமிழ் மக்கள் அடைந்த துன்ப, துயரங்கள், இழப்புகள் எண்ணற்றவை; எழுத்தினால் மட்டும் அளக்கமுடியாதவை.

இந்த இழப்புக்களினால் தமிழர்கள் தமது போராட்டத்தில் சலிப்புற்றுவிடுவார்கள் எனத் தப்புக்கணக்குப் போடாமல் —

கறுப்பு ஜூலைக்குப் பிராயச்சித்தம் செய்யும் விதத்தில், இந்த மிகப்பிந்திய வேளையிலாவது, சிங்கள மக்களும், அவர்கள் தலைவர்களும், தமிழர்களின் உரிமைகளுக்குத் தடையாக இருப்பதில்லை என்ற மனப் பக்குவத்தை அடைவார்களா?

மட்டு. மக்கள் வங்கியின் கடன்முகவர்களாக 39 பேர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் வங்கியின் கடன் முகவர்களாக 39 பேர் நியமனம் பெற்றுள்ளார்கள்.

இத்தகவலை மக்கள் பிராந்திய முகாமையாளர் திரு. கே. பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவிக்கையில்:-

39 முகவர்களில் 18 முகவர்கள் மட்டும்தான் செயல்படுகிறார்கள். இம் முகவர்கள் மூலம் 44 பேருக்கு 2 லட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய முகவர்கள் தற்போதைய சூழ்நிலை காரணமாக செயல்பட முடியாது என தெரிவிக்கிறார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் 28 முகவர்களில் 3 பேர் மட்டும்தான் செயல்படுகிறார்கள். ஓரிருவர் பதவி விலகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (த-21)

1986 இல் கைவிடப்பட்ட

யாழ். பல்கலைக்கழக மாணவர் நிலைய கட்டட வேலை மீண்டும் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். பல்கலைக்கழக மாணவர் நிலைய கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

கடந்த 86 இல் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி கட்டட வேலைகள் ஒப்பந்தக்காரரால் பூர்த்தி செய்யப்படாததை அடுத்து இவ்வருடம் வேலைகள் நிறுத்தப்பட்டன.

புதிய ஒப்பந்தக்காரர் தெரிவுசெய்யப்பட்டு மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

பல்கலைக்கழக மாணவர் கேந்திரம், கன்டீன் ஆகியவற்றை 50 லட்சம் ரூபா செலவில் அமைக்க திட்டம் திட்டப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக நிர்வாகிகள், புதிய ஒப்பந்தக்காரரை தெரிவுசெய்யும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். (இ-3)

உள்நாட்டு மருத்துவத்துறை பற்றி ஆய்வு

வட்டக்கச்சி, ஜூலை 25

கடந்தவாரம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் குழு உள்நாட்டு மருத்துவத்துறை சம்பந்தமான ஆய்வை மேற்கொண்டது.

இது சம்பந்தமான ஆய்வுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-163)

யூ. என், எச். சி. ஆர்.:

வலி வடக்கு அகதிகளுக்கு 71 வீடுகள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினால் வலிவடக்கு பிரதேச சபைப் பகுதியில் உள்ள அகதிகளுக்கு 71 வீடுகளை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த வீடமைப்புத் திட்டம் கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. முதலாவது கட்டத்தில் 4 வீடுகளும், இரண்டாவது கட்டத்தில் 5 வீடுகளும், மூன்றாவது கட்டத்தில் 11 வீடுகளும், நான்காவது கட்டத்தில் 25 வீடுகளும் ஐந்தாவது கட்டத்தில் 26 வீடுகளுமாக மொத்தம் வலிவடக்கில் 71 வீடுகள் அமைக்கப்பட்டுவருகிறது.

இவ்வீடுகளில் 41 வீடுகள் இந்தியாவில் இருந்து கப்பலில் வந்த அகதிகளுக்கும், 30 வீடுகள் உள்ளூரில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்குமாக அமைக்கப்படுகின்றன.

இந்த 71 வீடுகளில் 10 வீடுகள் முற்றாக அமைத்து முடிக்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டு விட்டன என்று அறியவருகிறது.

மீதி வீடுகள் அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. (ச-13)

மாணவருக்கு விடுதி வசதி

மட்டக்களப்பு, ஜூலை 25

கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை, வர்த்தக, முகாமைத்துவ பீட மாணவர்களுக்கு பார் வீதியில் விடுதி வசதியளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடத்தின் முன்பு பல்கலைக்கழக விருந்தினர் விடுதி அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-21)

றெட்பானா நிதிஉதவி

மாங்குளம், ஜூலை 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பதினேழு பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு 'றெட்பானா' நிறுவனம்பாலர்களுக்கு கல்வி போதிப்பது சம்பந்தமான பயிற்சி வகுப்பு ஒன்றை நடத்த நிதி உதவி செய்தது. (ச-94)

நிந்தவூர் பிரதம தபாலதிபராகக் கடமையாற்றி, அண்மையில் சாவகச்சேரி பிரதம தபாலதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு. ரீ. தியாகராஜாவுக்கு, நிந்தவூர் தபாலகத்தில் பிரிவுபசார வைபவம் ஒன்று நடத்தப்பட்டது.

வைபவத்தில் நன்றி தெரிவித்துத் தபாலதிபர் திரு. தியாகராஜா உரையாற்றுவதையும், பதில் தபாலதிபர் திரு. ரீ. அரசகுலசிங்கம், உதவி தபாலதிபர் ஜனாப். ஐ. எவ். அஷ்ரப் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

படம்:- அம்பாறை மாவட்ட செய்தியாளர் (இ - 14)

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பஸ்சேவை

மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

புதுக்குடியிருப்பு, ஜூலை 25

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்கும்படி பல்வேறு மட்டத்தில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இச்சேவை நிறுத்தப்பட்டதினால் ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு 12 மைல் தூர பிரயாணத்தை மேற்கொள்வதற்கு மக்கள் 50மைல் தூர பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஒட்டுசுட்டானில் இருந்து புதுக்குடியிருப்புக்கோ அல்லது புதுக்குடியிருப்பில் இருந்து ஒட்டுசுட்டானுக்கோ செல்ல வேண்டுமாயின முல்லைத்தீவிற்குச் சென்றே தமது பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

முத்தையன்கட்டு, விஸ்வமடு, சாளம்பன், மண்ணாகண்டல் போன்ற கிராமங்களில் வாழும் ஏழை விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (க-126)

சரியான தீர்மானத்தை உரிய நேரம் எடுப்பவரே

சிறந்த முகாமையாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 25

''சரியான தீர்மானத்தை உரிய நேரத்தில் எடுப்பவரே சிறந்த முகாமையாளர்.

யாழ். பிராந்திய கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்கள் உப-அதிபர்களுக்கான கருத்தரங்கு ஒன்றில் ''தனித்துவ முகாமைத்துவம்'' பற்றி உரையாற்றுகையில் காங்கேசன்துறை ஸ்ரீ லங்கா சிமெந்து கூட்டுத்தாபன நிர்வாக முகாமையாளர் திரு. வி. ரி. சிவலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கருத்தரங்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

திரு. சிவலிங்கம் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

''தனித்துவ முகாமைத்துவம் ஒரு எரிமலைமேல் இருப்பது போன்றது. மக்களுடன் பழகுவது இயந்திரங்களுடன் பழகுவது போன்றது அல்ல. மக்கள் ஒவ்வொருவரையும் தனிப்படத் தனிப்பட நடத்த வேண்டும்.

''பாடசாலை அதிபர்களும் முகாமையாளர்களே.

ஒரு பெரிய கல்லூரியில் அல்லது பாடசாலையில் ஆசிரியர்கள், மாணவர்கள் காரியாலய அலுவலர்கள் இருக்கின்றனர். பாடசாலை அதிபர் இவர்களை நிர்வகிக்க வேண்டும். இவர்களின் வேலைகளையும் வேலைத்தளத்தில் இவர்களின் உறவுகளையும் இவர் நேரடியாகக் கண்காணிக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (ச)

இலங்கையில் அமுலுக்கு வர உள்ள

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி

தமிழகத்தில் துணை மந்திரி ஆய்வு

சென்னை, ஜூன் 25

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை இலங்கையிலும் அமுல் செய்யத் தீர்மானிக்கப்பட்டதை அடுதது இலங்கைத் துணை அமைச்சர் திரு. தேவராஜ் அண்மையில் தமிழ்நாடு சென்று இது தொடர்பான ஆலோசனைகளை நடத்தி இருந்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

எழுத்துச் சீர்திருத்தம் தமிழ்மொழியை அறிவுபூர்வமானதாகவும், இலகுவானதாகவும் மாற்றும் அதே நேரத்தில் மாணவர்கள் எளிதாகத் தமிழைப் படிப்பதற்கும் உதவும்.

தமிழ்மொழி பேசப்படும் நாடுகளை எல்லாம் ஒத்தநிலையின்கீழ் கொண்டுவர எழுத்துச் சீர்திருத்தம் உதவும்.

இலங்கையில் கல்விமான்கள், பத்திரிகையாளர்கள் அடங்கிய மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

எழுத்துச் சீர்திருத்தத்தை உடனடியாக அமுல் நடத்தும்படி அம்மாநாடு அரசைக் கேட்டுக்கொண்டது. அதைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிஆராயவே நான்சென்னை வந்திருக்கிறேன்.

அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தரும் [illegible] டாக்டர் வி. ஜி. குழந்தைசாமி, தினமணி ஆசிரியர் திரு. ஐராவதம் மகாதேவன். தமிழறிஞர் டாக்டர் ஔவை நடராஜன் ஆகியோருடன் இதுபற்றிச் சந்தித்துப் பேசினேன்.

எழுத்துச் சீர்திருத்தத்தை அமுல் நடத்துவதில் உள்ள சிக்கல், அதற்கான காலஅட்டவணை ஆகியனபற்றி எனது பேச்சுக்கள் இருந்தன.

சிங்கப்பூரில் எழுத்துச் சீர்திருத்தம்பற்றி உரைநிகழ்த்தியதாக டாக்டர் குழந்தைசாமி சொன்னார்.

தமிழ்நாட்டில் தமிழ்மொழியில் என்னசீர்திருத்தம் இடம்பெறுகின்றதோ அதைச் சிங்கப்பூரிலும் அமுல்நடத்துவது என்று சிங்கப்பூர் அரசு தீர்மானித்துள்ளது.

காலத்துக்கு ஏற்ப எழுத்துச் சீர்திருத்தத்தை இலங்கையும் கொண்டுவரத் தீர்மானித்திருப்பதை டாக்டர் குழந்தைசாமி வரவேற்றார்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அமுல நடத்துவதால் இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையே புத்தகங்கள் பரிமாற்றம் இடம்பெறும்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தாவிட்டால், இலங்கையில் இரு[illegible] இறக்குமதி செய்வது [illegible] இருக்கும்.

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகியநாடுகளிடையே இலக்கிய பரிவர்த்தனை இடம்பெற தமிழ் எழுத்துக்களை உபயோகப்படுத்தும் முறையில் ஒத்த நிலை இருக்கவேண்டியது அவசியம்.

தமிழ் இலக்கியத்தில் புதிய படைப்புக்கள் இந்த நாடுகளில் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

எழுத்துச் சீர்திருத்தத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் இந்த வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்ய முடியும்.

கல்வி வளர்ச்சி மற்றும் துறைகளில் உள்ள தவறான எண்ணங்களை அகற்றவும் செலவுகளைத் தவிர்க்கவும் முடியும்.

ஒரேதுறை சம்பந்தமான புத்தகங்களை இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் வெளியிடுவதால ஏற்படும் அநாவசியமான செலவுகளைத் தவிர்க்க எழுத்துச் சீர்திருத்தம் உதவும் என்றும் டாக்டர் ஔவை நடராஜன் தெரிவித்தார்

இப்படி இலங்கை துணை அமைச்சர் திரு. பி. தேவராஜ் சென்னையில் கூறினார். (க-எ)

பாவனையாளருக்கு லாபத்தில் பங்கு

ப. நோ, கூ. ச. புதிய நடவடிக்கை

அச்சுவேலி, ஜூலை 25

வலிகிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் பாவனையாளர்களுக்கு வருடந்தோறும் இலாபம் வழங்கும் புதிய நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

வருடந்தோறும் சங்கத்தின் விற்பனைக்கிளைகளில் 8 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான நுகர்ச்சிப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் பாவனையாளர்களுக்கு அவர்கள் கொள்வனவு செய்த பெறுமதிக்கு ஏற்ப இலாபம் பங்கிட்டு வழங்கப்படவுள்ளது.

இம்மாதம் முதலாம்திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் இலாபம் வழங்கும் திட்டத்துக்கான பத்திரங்கள் பாவனையாளர்களுக்கு கிளை நிலையங்கள்மூலம் வழங்கப்பட்டுவருகின்றன. (ச-11)

வாசகர் திருமுகம்

மின் இணைப்பு கிடைக்குமா?

ஆனைக்கோட்டை அபிவிருத்திச்சபை கடந்த மூன்று ஆண்டுகளாக எமது தேவாலயவீதிக்கு மின்இணைப்புத் தருவதாகக் கூறிவருகின்றது. இதற்கான நிதியும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே வந்துவிட்டது, ஆனால் மின்இணைப்பு இன்னும் கிடைக்கவில்லை.

இங்கே ஓர் ஆலயம், இந்துக்கோயில, எமது புதுவாழ்வு நிலையம் ஆகிய மூன்று நிலையங்கள் உள்ளன. மின்இணைப்பு இல்லாமல் இங்கே ஒன்றுமே செய்யமுடியாது: சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஆவன செய்யும்படி கேட்கிறோம்.

வண. ஜோசப் ஜீவரத்தினம்
ஆனைக்கோட்டை.

ஊழியர் கவலை தீருமா?

நான் கடமையாற்றும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையில் இனக்கலவரங்களினால் பாதிப்புற்றவர்களென, மீண்டும் வேலை வழங்கப்பட்டவர்களில் அதிகமானோருக்கு புதிய நியமனமாகவே உத்தியோகங்கள் வழங்கப்பட்டுள்ளன. பழைய சேவைக்காலம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமலும் வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படாமலும் இவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் 25 - 4 - 1988 இல் வெளியிடப்பட்ட அரசாங்க சுற்றறிக்கை இல. 18/88 ஆனது மீண்டும் மீள வேலை வழங்கப்பட்ட ஊழியர்களுக்கு அவர்கள் சேவைக் காலத்தைக் கவனத்தில் எடுத்து பழைய ஊழியராகவே நடைமுறைப்படுத்தும்படி கூறுகிறது.

இச்சுற்று நிருபத்தை வட பிராந்திய போக்குவரத்துச் சபை அலட்சியப்படுத்தி மீள நியமனம் பெற்றவர்கள் விடயத்தில் பராமுகமாக நடந்து வருகிறது.

இதே வேளை செல்வாக்குப் பெற்ற ஒருசிலர் பழைய ஊழியர்களாகவும், சிலர் கடைசியாக எடுத்த பழைய சம்பளத்தொகையுடனும நியமனம் பெற்றுள்ளனர்.

ஆகவே இதில் சம்பந்தப்பட்டவர்களும், மத்திய மாகாண போக்குவரத்து அமைச்சர்களும் தலையிட்டு இரக்கசிந்தையுடன் ஆவன செய்து தரும்படி பாதிக்கப்பட்ட ஊழியர்கள் சார்பில் தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள
பாதிக்கப்பட்ட ஊழியன்.
மன்னார்

ஏன் பாரபட்சம்?

ஜனாதிபதியின் ஜனசக்தித் திட்டத்தின்கீழ் முத்திரைக் கூப்பன் பெறுபவர்கள் மாதாமாதம் ரூபா 2500/- பெறத் தகுதியுள்ளவர்களாகின்றனர். ஆனால் 25-30 ஆண்டுகள் அரசுக்கு உழைத்து நொந்துபோன ஓய்வூதியக்காரர்களுக்கு வாழ்க்கைப்படியான ரூபா 260/- பெறத் தகுதியில்லையா? இன்று அரசாங்கத்திலும் தனிப்பட்ட கம்பனிகளிலும் பலநோக்குச் சங்கத்திலும் கடமைபுரிவோருக்கு வாழ்க்கைப்படியாக ரூபா 260/- கொடுக்க முடியுமென்றால், ஏன் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மட்டும் இந்தப் பாரபட்சம்?

கே. எஸ். வடிவேல்
மட்டுவில்.

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவ சிறப்பிதழ்

அஞ்சுதலும், கெஞ்சுதலும், மிஞ்சுதலும் வேண்டாய்
அகத்துவிளை சுகத்தினும் செகத்தையும் நீண்டாய்!

P. I. பர்ணுண்டோ
பல்கட்டுபவர் - கண் பரிசோதித்து
கண்ணுடி கொடுப்பவர்.
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்பாக)
யாழ்ப்பாணம்.
கிளை: 292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(அரசினர் வைத்தியசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.

வெஞ்சிறைக்கு அஞ்சாத நெஞ்சமும் கொண்டாய்
வீணர்சொல் வார்த்தைக்கு நாணிமனம் நொந்தாய்!
அலுமினியம், பிளாஸ்ரிக்,
வார்ப்புப் பாத்திரங்களின் களஞ்சியம்
ராஜா ரேட் சென்ரர்
3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

'பொங்கு கண்ணீர் துயர்தன்னைப் போக்குதற்கே
புனிதசந் தன்தியோகு கோயில் கொண்டீர்!
டி. வி. கசற், றெக்கோடர், சுவர் மணிக்கூடுகளுக்கு
மரியநாயகம் ஸ்ரோர்ஸ்,
55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,

வேதமுரை பராசர் பரிசேயர் தம்மை
வெட்கித் தலையைக் குனியவும் வைத்தாய்!
பிறைற் ஹவுஸ்
அந்தியகால சேவைகள்
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் முன்னிலையில்
★ உடனுக்குடன் அரைத்துத் தரப்படும்
'பெமிலி' கோப்பித்தூள்,
★ குளிர்பானங்கள் ★ பிஸ்கட்ஸ் ★ ரொபி
வகைகளுக்கு
★ பெமிலி காடின்ஸ் ★
13A, குருநகர் நவீன சந்தை,
யாழ்நகர்.

விலை மதிக்க முடியாத இன்னுயிரும் ஈந்தாய்
வேதத்தின் வேராகி கோவிலும் கொண்டாய்!
✶ ஷண்ஜீவ் ஸ்ருடியோ ✶
&
✶ வீடியோ சேவிஸ் ✶
287, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

தலைவனுரை சிரமேற்று ஸ்பானியா விரைந்து
தவமறைகுப் பணிசெயச் சீடர்களைச் சேர்த்தாய்
அலைகடலும், மணல் வெளியும் இடரென்று எண்ணு
அடுத்துவரும் நாட்டார்க்கும் திருமறையைச் சொன்னுய்!
நியூ லக்ஸ்மன் கபே
32, தண்ணீர்த் தாங்கி வீதி, குருநகர்.

நியூ றஞ்சனுஸ்
(புடைவை மாளிகை)
84, 4 ஆம் குறுக்கு வீதி, சின்னக்கடை.
யாழ்நகர்.

அமுதினி ஸ்ரோர்ஸ்
(சில்லறை வியாபாரம்)
191, பிரதானவீதி, நான்காம் குறுக்குச்சந்தி,
யாழ்நகர்.

ஓ! அன்பன்
பிரதான வீதி, 6 ஆம் குறுக்குச்சந்தி,
யாழ்ப்பாணம்.

செல்வா ஹாட்வெயர்ஸ்
192, பாங்ஷால் வீதி, சின்னக்கடை.

128 ஆண்டுகள் பழைமை வாய்ந்த

குருநகர் புனித யாகப்பர் ஆலயம்

யாழ் நகர மத்தியில் அமைந்துள்ள கடல் அலைகள் கொஞ்சும் நகராம் குருநகரின் குலவிளக்காய், குன்றாத தீபமாய், வழிகாட்டியாய், பாதுகாவலராய் ஏற்றிப் போற்றப்படுபவர் புனித யாகப்பராவார். அவரது திருவிழா ஒவ்வொரு ஆண்டும் ஆடி 25 ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அவரை பக்தர்கள் புனித சந்தியோகுமையோர், படையாளி, படைமிரட்டிப் புனிதயாகப்பர், போராளி, புனித பெரிய யாகப்பர் என்று பலவாறு அன்புடன் குறிப்பிடுவர்.

இவர் அன்பின் அரசன், அமைதியின் அண்ணல், சாவை வென்ற சத்தியன், இயேசுக் கிறிஸ்துவின் அன்புக்கு பாத்திரமான அப்போஸ்தலராவார். ஏழைக் கடற்றொழிலாளியான இவரைத் தனது சீடனாகத் தேர்ந்தெடுத்த இயேசு சத்திய மறைக்கான முதற்கனியாக்கி நித்தியவாழ்வில் தன்னோடு சேர்த்துக்கொண்டார். இப்புனிதர் இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்த சகல முக்கிய நிகழ்ச்சிகளிலும் அவருடன் கூடவிருந்தார். இயேசு தபோர் மலையில் மறுரூபமானபோதும் பிரதான செபக்கூடத் தலைவன் யேரியசின் மகளை உயிர்ப்பித்தபோதும், ஜெஸ்தமெனி தோட்டத்தில் கடின அவஸ்தைப்பட்டுத் தியானித்த போதும், அவர் அருகில் இருந்தார். இயேசுவோடு வாழ்ந்து அவருக்காக தம்மை அர்ப்பணித்து அவரது மகிமையை ஸ்பானியா, யூதேயா, ஜெருசலேம் போன்ற நாடுகளில் பகிரங்கமாகப் போதித்து வேதசாட்சியாக மரித்த புனித யாகப்பரை கடற்றொழிலைத் தொழிலாகக் கொண்டுவாழும் குருநகர் மக்கள் பாதுகாவலராகத் தேர்ந்தெடுத்தனர். அவரது நாமத்தில் ஒரு பேராலயத்தையும் அமைத்துக் கொண்டனர். இவ் ஆலயம் இன்று (25-7-89) 128 ஆவது வருட நிறைவினைக் காணுகின்றது.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த பங்கு குருதல மக்களாகிய இவர்களை யாழ்ப்பாண அரசர்கள் இந்தியாவிலிருந்து அவர்களது தளபதிகள் தலைமையில் போர் வீரர்களாக அழைத்துவந்து யாழ்ப்பாணத்தின் வடபகுதிப் பாதுகாப்பிற்காக பட்டினத்தில் குடியமர்த்தினர் என வரலாறு கூறுகின்றது. போர்த்துக்கீச படையெடுப்பின்போது வர்களை வன்மையாக எதிர்த்தவர்கள் என போர்த்துக்கீச சரித்திர ஆசிரியர் குஏரேஸ் வர்ணிக்கின்றார். இவ்வாறு வரலாறு உடைய இம் மக்கள் நாளடைவில் பொழுது போக்குத் தொழிலாகக் கொண்ட மீன் பிடித்தொழிலை ஜீவனோபாயத் தொழிலாகக் கைக் கொண்டனர். அதன் காரணத்தாலே தமது பாதுகாவலராகப் புனிதயாகப்பரைத் தேர்ந்து கொண்டனர் எனலாம்.

பல கலை அம்சங்களுடன் காட்சிதரும் புனித யாகப்பர் ஆலயம் மேஸ்திரி சந்தியோகு அவர்களின் கைவண்ணத்தில் உருவானதாகும். கோவிலின் உட்புறம் அமைந்துள்ள அழகிய வேலைப்பாடுகளும், உரோமாபுரியிலிருக்கும் பேதுருவானவர் ஆலயத் தூபிமாடம் போன்ற தூபிமாடமும் அவரது சிற்பத்திறமைக்கு எடுத்துக்காட்டானவை. இவ்விதமான கலையம்சமுடைய பெரிய ஆலயத்தை யாழ்நகரில் வேறு எங்கும் காண்பது அரிது. முப்பத்தியொன்பது குடும்பங்கள் மாத்திரம் இப்பேராலயத்தைக் கட்டி முடித்தனர் என்பது இன்னுமொரு வியப்புத் தரும் விடயமாகும்.

அவரில் நம்பிக்கை வைத்து வரம் வேண்டிவரும். பக்தர்களின் அபிலாஷைகளை ஆண்டவன் இயேசுவிடம் இருந்து பெற்றுக் கொடுக்க யாகப்பர் தவறுவதேயில்லை. நாமும் இன்று நம்மத்தியில் வளரும் பிரிவினைகளைக் களைந்து நம் இனத்திற்கு அன்பும், சமாதானமும் கிடைக்க, போர் ஆயுதங்களால் ஏற்படுகின்ற அழிவுகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற புனித யாகப்பர் மூலமாக இறைவன் இயேசுக் கிறிஸ்துவை வேண்டுவோமாக. ✶

குருநகர் புனித யாகப்பர் ஆலய முகப்புத் தோற்றம்

- டோறஸ் இராஜசிங்கம் -

மலர் தயாரிப்பு:
'உதயன்'
குருநகர் செய்தியாளர்
த. பரமலிங்கம்
விளம்பரங்களில் பாவிக்கப்
பட்ட கவிவரிகளை எழுதியவர்
கவிஞர் 'தூயமணி'

குருநகர் அருந்தவப் பேறே!

இராகம்: ஹம்சத்வனி, தாளம்: ஆதி

பல்லவி

வரம் அருள்வாய் தவமுனிவா – நீ
வளர் நகர்ப் பதியாழ் யாகப்பரே எமக்கு

அனுபல்லவி

குருவாக எமை வந்து ஆளுவாய்
குருநகர் பதிதனிலே திருவாகினுய்

சரணங்கள்

தேவ திருக்குமரன் திருமறை முதல்வனை
பாவம் அகலவந்த காவலர் யேசுநாதரை
மேவும் மலைமுகட்டில் மூவருடன் சோதி
மேன்மை பெற ஆன்ம ஈடேற்றம் கண்டாய்
(வரம்...)

அஞ்சலித் தேயுமை அண்டிவந் தோமே
அன்பும், அறிவும் தந்தெமை ஆளுமையா,
பஞ்சம் பசிப்பிணி பகைவனும் நீயே
பரிந்து நம்குருநகர் அருந்தவப் பேறே
(வரம்...)

''தூயமணி'', பி. மிக்கேல்பிள்ளை.

சிங்கா தனம்போலும் சித்திரத்தேர் தனிலமர்ந்து
திருவளரும் குருநகரில் திருவுலா வரும் காட்சி
அங்கமெலாம் சிலிர்க்க அகம் குளிர முகம் மலர
ஆடிவளர் இருபத்து ஐந்தாம் நாள் யாகப்பர்!

சிறுவர், சிறுமிகளுக்கான ✶ றெடிமேட் ஆடைகளைத் தெரிவு செய்ய
★ நாடி வாருங்கள் ★
சான்: யக்கோபுஸ் றெடிமேட் காமன்ஸ் நிலயம்
சின்னக்கடை பிரதான வீதிச் சந்தி, யாழ்நகர்.

பங்குத் தந்தையின் ஆசியுரை

புனித யாகப்பர் திருவிழாவைக் கொண்டாடும் பங்கு மக்களின் மகிழ்ச்சியோடு எனது மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துன்பமான காலகட்டத்திலும் தங்கள் விசுவாசத்தாலும விடாமுயற்சியாலும் தங்கள் பாதுகாவலராம் புனித யாகப்பரின் திவிழாவைக் கொண்டாடி மகிழ்வதை ஒட்டி அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

குருநகர் மக்கள் இறை அன்பைப் பெற்று தங்கள் பாதுகாவலரின் வழியாக தங்கள் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்து கிறிஸ்துவுக்கு உண்மைச் சாட்சிகளாக வாழ வேண்டுமென ஆசி கூறுகிறேன்.

பி. எம். இம்மானுவேல்
பங்குத் தந்தை
புனித யாகப்பர் ஆலயம்
குருநகர்
யாழ்ப்பாணம்.

பொங்குதிரை நீர் சுவற பூமணத்தை தென்றல் தர
பூவையரும் ஆடவரும் புடைசூழப் பவனி வரும்
எங்கள் குரு இறையருளன் சநசந்தியோகு
ஏழைபங்கன் வேலை கண்டு இரங்கியருள் புரிவார்!

★ கடற்றொழில் இயந்திர உதிரிப்பாகங்களுக்கும்
★ நூல் ★ வலை ★ கயிறு ★ போயா
போன்ற உபகரணங்களுக்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்:
குருநகர் கடற்றொழில்
அபிவிருத்திச் சங்கம்
30, சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எங்களுக்காய் யேசுவை நீர் மன்றுடும், அதுவே
எமை மீட்டு சுமை நீக்க இரங்கியருள் குருவே!
SAMSUNG T. V.
விற்பனையாளர்களும், பழுதுபார்ப்பவர்களும்
றேடியோ மனுவல்,
121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

செங்கரத்தில் கோலொன்றை ஏனேந்துகின்ருய்?
சிறுமைக்கும் வறுமைக்கும் ஆட்பட்டோம் நாங்கள்
✶ மின் இணைப்புப் பொருள்களுக்கு
எம்மை நாடுங்கள்!
முருகன் எலக் றிக்கல்ஸ்
6/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தலைமுறைக்குத் தலைமுறையாய் இறைபரசு வாழ
தாழ்ச்சியொடு மாட்சிமையாய் மீளுட்சியும் கண்டாய்!
அந்தியகால சேவைகளுக்கு எம்மை நாடுங்கள்!
★ வைற் ஹவுஸ் ★
191, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

வேராகி மெய்மறையின் விழுதாகி நிலரும்
வினை தீர்க்க குருநகரில் கோவிலும் கொண்டாய்
மளிகைப் பொருட்களின் மாளிகை
ரவீந்திராஸ்
46, 4ஆம் குறுக்கு வீதி, சின்னக்கடை,
யாழ்நகர்.

சிங்காசனம் போலும் வெண்புரவி மீது
சீர்கொண்ட குருநகரில் அமர்ந்த அப்போஸ்தலுவே!
பலவர்ண - கறுப்பு வெள்ளை
படப்பிடிப்பாளர்கள்
லீலா ஸ்ருடியோ
190, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தஞ்சமென யேசுபரன் தலைவனுடன் சென்ருய்
தாய் தந்தை ஊர் சொந்தம் சகலதையும் விட்டாய்!
✶ யாழ்நகரில் சிறப்பாகக் கண்ணுடி
வழங்குபவர்
எஸ்.எம். பெர்ணுண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வெற்றிபெற வெண்புரவி மீதேறித் துலுக்கர்
விறுபடை கூறுபட வெற்றிகொள வாரீர்
அற்புதனே, நற்பரனே அன்புவழி அரசின்
ஆரணனைத் தன்னகத்தே ஆலயமாய்க்கொண்டோம்!
குருநகர் சிறகுவலை
கடற்றொழிலாளர் அபிவிருத்திச்
சங்கம்.

கொற்றவர்க்கும் அஞ்சான் கொடுஞ்சிறைக்கும் அஞ்சான்
கொடியவரைக் கண்டால் கடிதுரைக்கும் நெஞ்சோன்
கயவர்க்கும், கல்லார்க்கும் கருணையெனில் தந்தான்
காற்றெனவே சீற்றமுடன் கயவர் படை கொல்வான்!
குருநகர் முன்னேற்ற
ஐக்கிய முன்னணி

Modern Education Centre

Karaveddy — Point Pedro

A/L 89

எதிர்வரும் பரீட்சைக்கான பாடக்குறிப்புகள்
26-07-89 (புதன்கிழமை)
காலை 8.00 – 9.00 மணிவரை
வழங்கப்படும்.

[1274]

ஈராண்டு நினைவஞ்சலி

திருமதி நாகேஸ்வரி மனோசிவநாதன்

மலர்வு: 22-11-1965

உதிர்வு: 18-07-1987

திதி: 25-07-1989

ஈராண்டு சென்றிடினும் எம்மனதில் உம் நினைவு கலையாத ஓவியமாய்க் காணுகின்றோம் ஓர் கனவு! பாசத்தின் பிறப்பிடமே! பைந்தமிழ்க் காவியமே! பணிகின்றோம் பரமனடி பக்குவமாய் நீ சாந்தி பெற இன்முகம் காட்டி நீயு இனியவை பேசி நிதம் கனிவுடன் காட்சி தந்து கலகலப்பாய் இருந்தாய் நீயே! எங்குதான் காண்போம் அந்த இன்முகம் தன்னை? இங்கு மங்கிய ஒளியைப் போல மாயின வாழ்க்கை தானே! அன்புடன் லக்சனுவும் அருகினில் அனுசா குஞ்சும் என்னுடன் இருந்து கொண்டு எங்குதான் அம்மா என்றே, எங்கு நான் வந்தால் நானும் எங்கு தான் காண்பேன் உன்னை? என்னதான் சொல்ல அம்மா சோகத்தை அணைக்க அங்கு!

நின் பிரிவால் தவித்து ஏங்கும்:
கணவர், பிள்ளைகள், தந்தை, தாய்,
சகோதரர்கள், மாமன், மாமி,
மைத்துனர், மைத்துனிமார்;

''நாகேஸ்வரி வாசம்''
வேலணை மேற்கு,
வேலணை.

(1256)

ஜப்பான் பிரதமர் யுனோ ராஜினாமா!

ஆளும் கட்சிக்குப் படு தோல்வி!

டோக்கியோ, ஜூலை 24

ஜப்பானில் மீண்டும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்கான மேல்சபைத் தேர்தலில் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி படுதோல்வி அடைந்தது.

இதனைத் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் பிரதமராகப் பதவி ஏற்ற திரு. சொசுகி யுனோ தனது இராஜினாமாவை நேற்று டெலிவிஷனில் உரை நிகழ்த்தும்போது அறிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சியான சோஷலிசக்கட்சியின் தலைமையிலான கூட்டணி ஆளும் கட்சியிலும் பார்க்க மூன்று பங்கு ஆசனங்களைப் பெற்றது.

ஆளும் கட்சியின் தோல்விக்கான முழுப் பொறுப்பையும் தானே ஏற்றுக்கொள்வதாகவும் பிரதமர் யுனோ அறிவித்தார்.

நிதி நிறுவனங்கள் சம்பந்தமான ஊழல் குற்றச்சாட்டுகளின் மீது இரண்டு பிரதமர்கள் அடுத்தடுத்து ராஜினாமாச் செய்ததைத்தொடர்ந்து திரு: யுனோ பதவி ஏற்றார்

திரு. யுனோ மீது பணம் சம்பந்தமான ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருந்த போதும் பெண் விஷயம் தொடர்பாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அவருடன் தொடர்பு கொண்டிருந்த செய்ஷா பெண் ஒருத்தி இது சம்பந்தமாக டெலிவிஷனில் தோன்றி குற்றஞ் சாட்டினார்.

இது பிரதமர் யுனோவின் செல்வாக்கைக் குறைத்து விட்டது.

பிரதமரின் ராஜினாமாவைத் தொடர்ந்து விரைவில் பொதுத் தேர்தல் ஜப்பானில் நடத்தப்படவுள்ளது. (எ)

6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அரியாலையூர்
திரு. அழகராசா இராசன்
(யாழ் செயலகம்)

படைப்பு: 04-9-1963

இறப்பு: 25-7-1983

இலங்கையில் சகோதரர்களாகப் பிறந்தோம். 1983 இல் வெலிக்கடையில் கொலை செய்யப்பட்டோம், இவையனைத்தையும் எங்களால் மறக்க முடியாமல் இருக்கிறது. அன்பு மகனே! உன் நினைவுகள் எங்களை விட்டுப் பிரியாது. உன் ஆத்மா சாந்தி அடைவதாக.

தந்தை, தாய்,
சகோதரர், சகோதரி.

நெடுங்குளம் ரோட்,
அரியாலை.

(1260)

கம்போடியப் பேச்சுக்கள்

பாரிஸ், ஜூலை 24

பத்து ஆண்டுகளாக நீடிக்கும் கம்போடியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பேச்சுக்கள் இன்று பாரிஸில் ஆரம்பமாகின.

கம்போடியய பிரதமர் ஹூன்சென்னும் புரட்சித்தலைவர் நொரடோம் சிஹானுக்கும் இப்பேச்சுக்களில் கலந்து கொள்கின்றனர்.

கடந்த 18 மாதங்களில் இரண்டு தலைவர்களும் ஐந்தாவது தடவையாக இப்போது சந்திக்கின்றனர். (எ)

சீனாவில் 141 பேர் மரணம்

பீகிங், ஜூலை 24

சீனாவின் மத்திய மற்றும் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம், மலைச்சரிவு காரணமாக மேலும் 141 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

ஜப்பான் அரசியலை கலக்கும் பெண் அரசியல்வாதி 'டொய்'

டோக்கியோ, ஜூலை 24

ஜப்பான் அரசியலில் பெண் அரசியல்வாதி ஒருவர் உதயமாகி இருக்கிறார்.

அவர் பெயர் ராகாகோ டொய் (Takako Doi).

கடந்த ஞாயிறு நடந்த நாடாளுமன்ற மேல்சபைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய சோஷலிசக் கட்சியின் தலைவியே இவர். 60 வயதான செல்வி டொய், ஆண் ஆதிக்கம் நிறைந்த ஜப்பானில் பல தடைகளைத் தாண்டி அரசியல் வானில் நிலையான இடத்தைப் பிடித்து விட்டார்.

சட்ட விரிவுரையாளராகப் பணிபுரிந்த செல்வி டொய் திருமணமாகாதவர்.

ஜப்பான் அரசியலில் பெண்களுக்கு இடமில்லை — இப்படி ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி அமைச்சர் ஒருவர் தேர்தல் பிரசாரத்தின் போது வலியுறுத்தி வந்தார்.

நடந்து முடிந்த தேர்தல் பிரசாரத்தின் போது 17 நாள் ஜப்பான் முழுவதும் சென்று 120க்கு அதிகமான கூட்டங்களில் பேசினார்.

மேடைகளில் செல்வி டொய் பேச எழும்பியதும் மக்கள் ஆரவாரமும் கைதட்டலும் ஆரம்பித்துவிடும். அவர் பேச ஆரம்பித்ததும் மக்கள் அமைதியாக இருந்து கேட்பர்.

அந்த அளவுக்கு ஜப்பான் மக்களின் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள செல்வி டொய், ஜப்பானின் முதல் பெண் பிரதமராகும் வாய்ப்பைப் பெற்றார்.

கெய்ஷாப் பெண் ஒருத்தியால் பதவியிழந்த திரு. யுனோவின் இடத்துக்கு ஒரு பெண்ணே பிரதமராக வரும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (எ)

ஸ்டைரோபோம் உற்பத்திகளை
(றிஜிபோம்)
நாம் தயாரிக்கின்றோம்

● மீன் பிடிக்க உதவும்
மிதப்புக் கட்டைகள், ஷீட்டுக்கள்,
மீன்கொண்டு செல்லும் பெட்டிகள்,
ஐஸ்கிறீம் கொள்கலன்கள், பைப்,
இன்சுலேஷன் மற்றும் பொதிகட்டும் பொருட்கள்
மற்றும்
பொலிபிளெக்ஸ் உற்பத்திகளும்
(ஆர்பிபோம்)
குஷன்கள், மெத்தைகள், ஷீட்டுக்கள்,
ஸ்பொன்ஜ்கள் மற்றும் மெத்தை
போன்றவற்றைத் தயாரிக்க உதவும்
பொருட்களுக்கும்
● கவர்ச்சிகரமான சழிவுகள் வழங்கப்படும்.

வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு
முகவர்கள் தேவை.

தொடர்பு கொள்க:
லங்கா பொலிமர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
49, கெய்சர் வீதி, கொழும்பு-11.
246, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
29/1, போதிராஜ மாவத்தை, கொழும்பு - 11.
(பீப்பிள்ஸ் பார்க் கம்பிளெக்ஸ்)
தொலைபேசி: 421954, 530455.

இலங்கை LANKA

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

முக்கிய அறிவித்தல்

சகல லங்கா சுபர்
வியாபாரிகள் வாடிக்கையாளர்கள் என்போருக்கு
(பிரிமியம் மோட்டர் கெஸோலின்)

இறக்குமதி செய்யப்பட்ட இளம் மஞ்சள் நிறத்திலான பிரிமியம் மோட்டர் கெஸோலின் லங்கா சுபர்-சிக்கிரத்தில் சந்தைப்படுத்தப்படுமென்பதை கூட்டுத்தாபனம் சகல வியாபாரிகள், மோட்டார் வாகனக்காரர்கள் மற்றும் லங்கா சுபர் பாவனையாளர்கள் என்போருக்குத் தெரிவிக்க விரும்புகின்றது.

நிறத்தில் சிறிதளவு வித்தியாசப்பட்டாலும், இதுவரை சந்தைப்படுத்தப்பட்ட லங்கா சுபரின் சேர்மானத்துக்கு இணையானதாகும்.

- முகாமையாளர்
சந்தைப்படுத்தலும் விநியோகமும்,

சந்தைப்படுத்தலும் விநியோகமும் செயற்பாட்டகம்,
எண்ணெய் தாபிப்பு நிலையம்,
கொலன்னாவ.

நீங்காத நினைவு அஞ்சலிகள்

அமரர் திரு.
சுப்பையா நாகநாதர்
(ஓய்வு பெற்ற பிரதம தபால் அதிபரும் நல்லூர் ஓய்வூதிய நலன் புரிச் சங்கத் தலைவரும்)

தோற்றம்: 19-12-1907 மறைவு: 08-11-1987

அமரர் திருமதி
புஸ்பகாந்தியம்மா நாகநாதர்

தோற்றம்: 08-07-1913 மறைவு: 04-08-1988

திதி: 25 – 07 – 1989

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் எம்மை வளர்த்து ஆளாக்கி குடும்பத்துக்கு மட்டுமன்றி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் வழி காட்டியாக வாழ்ந்து மறைந்து நிறைவடையும் இந்நாளில் உங்கள் இருவரினதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்:

உங்களை நினைவுறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திரு: ஸ்ரீ புஸ்பநாதன் (அதிபர்)
யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

[illegible]

45 ஆம் நாள் நினைவஞ்சலி

25-07-1989

● **திரு. மாதவன் சங்குண்ணி** ●
(வர்த்தகர்- நெல்லியடி)

தோற்றம்: 15-10-1929

மறைவு: 11-06-1989

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் திருவுருவாய், 45 ஆண்டுகளாய் நெல்லியடியில் பழகியோர் இதயங்களில் பாசமலராகவீற்றிருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே இன்சொல்லும், ஈகையுணர்வும் ஊருக்கே தெய்வம் போல இருந்த உங்களை ஒரு நொடியில் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்க காலனுக்கு எப்படி மனம் வந்ததோ? ஐயா! ஆண்டுகள் பல சென்றாலும் எங்கள் இதயத்தை விட்டு உங்கள் நினைவு அகலாதையா!

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்தும், மற்றும் பல வகையிலும் எமது துயரத்தில் பங்கு கொண்டு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள், நண்பர்கள்.

தபாற்கந்தோர் அருகாமை,
நெல்லியடி, கரவெட்டி.

[1265]

கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில்:
21-10-1962

இறைவனடியில்:
25-07-1983

● **அம்பலம் சுதாகரன் (சுதா)** ●

மாதவத்தால் உம்மையிந்த
மண்மீது ஆண்மகவாய்க்
காதலுடன் பெற்றோமே
கண்ணே சுதாகரனே!
ஏதமில்லாத் தேனே
எமைப்பிரிந்து இறையடைந்த
நாதமணி கேட்குதையா
நாளின்றும் ஏழாண்டே!
அப்பாவோடு அம்மாவும்
உன் ஆசை மருமக்களும்
எப்போதுன் திருவடிக்கே
இன்பமலர் சாத்தி நின்றோம்.
முப்போதும் உன் தங்கை
மூவருடன் தம்பிமாரும்
தப்பாமற் பிரார்த்தித்தோம்
சாந்தியினைக் காண்பாயே!

என்றும் உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

நெடுந்தீவு.

(1263)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கடலலையின் கடுமையினால் கலங்கவுள்ளம்
கர்த்தர் சொல் வார்த்தையினால் சித்தமதுமாறி
விடலையொரு பருவமதில் வேதநெறி கூறி
வேதனைக்கும், சோதனைக்கும் ஆளாகிய தேவே!

சென். அன்ரனீஸ்

40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

உதயன்

25 07 · 1989 செவ்வாய்க்கிழமை

புடமதனில் வார்த்திட்ட பொன்போன்ற யேசு
புனிதருடன் தவவாழ்வில் பொய்மறைகள் மாழ
திடமனதுடன் அன்னை, தந்தை விலத்தி
தெய்வீக வழிநின்ற யாசப்ப முனியே!

சென். அன்ரனீஸ்.

40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

நகரில் நேற்று பதற்றம்

யாழ்ப்பாணம் ஜூலை 25

யாழ் நகரப் பகுதியில் நேற்றுக் காலை கேட்ட குண்டுச் சத்தத்தால் சிறிதுநேரம் பதற்றம் ஏற்பட்டது.

கண்டெடுத்த குண்டொன்றை படையினர் செயலிழக்கச்செய்தனர் என்ற விடயம்தெரியவந்ததை அடுத்து பதற்றம் அடங்கியது. (ஒ-3-51)

ஈரானிய அமைச்சர் வருகிறார்

கொழும்பு, ஜூலை 25

ஈரானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் நாளை புதன்கிழமை இலங்கைக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொள்கிறார்.

மாலைதீவு தேசிய தின வைபவத்தில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பும் வழியில் ஈரானிய அமைச்சரின் இலங்கை விஜயம் இடம்பெறுகின்றது. (இ)

கீரிமலை வாசி சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 25

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு முன்னால் நேற்று ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் கீரிமலையைச் சேர்ந்த நற்குணம் என்பவர் என்றும், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

மேலும் இருவருக்கு அமெரிக்க வீஸா

யாழ்ப்பாணம், ஜூலை 25

அமெரிக்காவில் வசிப்பதற்கான வீஸா அனுமதி விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ள மேலும் இருவரின் பெயர்கள் இப்போது தெரிய வந்துள்ளன.

காங்கேசன்துறையைச் சேர்ந்த நடராசா யோகராசா, மல்லாகம் கல்லாரையைச் சேர்ந்த முத்துக்குமாரு குமாரசிவம் ஆகியோரே அந்த இருவரும் ஆவர். (ஒ)

மடம் வீதியில் நேற்று சோதனை

குருநகர், ஜூலை 25

யாழ் மடம் வீதிப் பகுதி வீடுகள் நேற்றுக்காலை சோதனையிடப்பட்டன. (ஒ-51)

விடுவிக்க முயற்சி

யாழ்ப்பாணம் ஜூலை 25

யாழ்- பல்கலைக் கழக நுண்கலைப் பீட மாணவியான ராஜாம்பிகை நடராசவை விடுதலை செய்யும் முயற்சியில் பல்கலைக்கழக நிர்வாகம்நேற்று ஈடுபட்டிருந்தது.

பல்கலைக்கழக உயர் மட்டக் குழு ஒன்று நேற்று அமைதிப் படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியது. (ஒ-3)

பிரிட்டன் செல்வதற்கு பகிரங்க வீஸா இல்லை

தூதுவர் நேற்று விளக்கம்

கொழும்பு, ஜூலை 25

பிரிட்டனுக்குச் செல்ல பகிரங்க வீஸாவழங்கப்படவில்லை என்று கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் நேற்றுத் தெரிவித்தார்.

வெளிநாட்டவருக்கு விஸா வழங்கும் விதிகளில் பிரிட்டன் மாற்றம் எதுவும் செய்யவில்லை.

பிரிட்டன் செல்வதற்கு பகிரங்க வீஸ வழங்கப்படுவதாக வெளிவந்த செய்தியில் உண்மை எதுவும் இல்லை அங்கு செல்ல வீஸா அவசியமானது என்று பிரிட்டிஷ் தூதர் மேலும் சொன்னார். (ஒ-எ

யாழ் மாவட்டத்துக்கு

புதிதாக நியமனம் பெற்ற 13 ஆரம்ப ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம். ஜூலை 25

யாழ்-மாவட்டத்தில் புதிதாக 13 பேர் ஆரம்ப ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

எதிர்வரும் சனிக்கிழமை தெரிவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட 13 பேரையும்யாழ்-கல்வித் திணைக்களத்தில் சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

எம். சாந்தகுமாரி, (சரவெட்டி), பி. பாலநந்தினி (சாவகச்சேரி), எம். நிர்மலாதேவி (அல்வாய்), ஈ சி. சரவணமுத்து (கரவெட்டி), வி. ரஞ்சிதமலர் (தெல்லிப்பளை), பிலூசியா புனிதவதி (பண்டத்தரிப்பு), வீ. மல்லிகாதேவி (புங்குடுதீவு), பி. பாலஜீவனி (சாவகச்சேரி), எம். சிவகுமாரன் (நீர்வேலி), கே. நித்தியானந்தன் (அளவெட்டி), எம். யோகேஸ்வரி (குடத்தனை), ரி. சிவகாமசுந்தரி (கொக்குவில்), ஏ ரஞ்சினி (மீசாலை) [ஓ 3]

கைகளை காப்புறுதி செய்த இலங்கை இசைக்கலைஞர்!

கொழும்பு, ஜூலை 25

இலங்கையிலேயே முதல் தடவையாக இசைக் கலைஞர் ஒருவர் ஐந்து லட்சம் ரூபாவுக்கு தனது இரு கைகளையும் காப்புறுதி செய்திருக்கிறார்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இதற்கான ''பொலிஸியை'' அவருக்கு வழங்கியுள்ளது.

அவரது பெயர் திலுப்கபட முதலிகே. வயது 33.

எலக்ரோனிக் இசைக்கருவியை வாசிப்பதில் வல்லுநரான இவர் தனது கைகளை காப்புறுதி செய்வது பற்றிய முயற்சியில் சில ஆண்டுகளாக ஈடுபட்டு வந்தார்.

இப்போதுதான் அதில் வெற்றி கண்டார், ஆண்டுதோறும் இவர் 4,510 ரூபா 'பிரிமியமாக' காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தவேண்டும். (ஒ-எ)

அமிரின் மகனுக்கு பொலீஸ் பாதுகாப்பு!

சென்னை, ஜூலை 25

சென்னையில் தங்கியுள்ள மறைந்த கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் மகன் காண்டீபனுக்கு தமிழ் நாடு பொலீஸார் பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

நகர ஹோட்டலில் தங்கியிருந்த திரு. காண்டீபனை பொலீஸார் பாதுகாப்பான இடம் ஒன்றில் தங்க வைத்துள்ளனர். (ஒ-எ

கிளிநொச்சிச் சம்பவம்:

அறுவர் உயிரிழப்பு

வட்டக்கச்சி, ஜூலை 25

இரணைமடு, 155ஆம் கட்டையில் சனியன்று இடம்பெற்ற மோதலில் 4 அமைதிப் படை ஜவான்கள் கொல்லப்பட்டனரென்றும்—

அதை அடுத்து இடம் பெற்ற அசம்பாவிதங்களில் இரு கிராமவாசிகள் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாரதிபுரத்தைச் சேர்ந்த எஸ். முகமது ஐயூப்கான் (25 வயது), தர்மு அல்லது சிவராசா (52 வயது) ஆகியோரே இறந்தவர்கள் என்று கூறப்பட்டது.

155 ஆம் கட்டைப் பகுதியில் வீடுகளும் கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

இச்சம்பவங்கள் பற்றி முதலில் கிடைத்த தகவல்கள் நேற்றைய உதயனில் வெளியானது தெரிந்ததே. (ஒ 163)

இந்தியப் படைக்கு எதிராக போர் நடக்குமாம்

பௌத்த பிக்குமார் எச்சரிக்கை

கொழும்பு. ஜூலை 25

ஜூலை 29க்கு முன்னர் இந்திய அமைதிப்படை வெளியேறுவிட்டால் இந்தியாவுக்கு எதிராக போரில் இறங்கப் போவதாக தென்னிலங்கை தேசிய பௌத்த பிக்குகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இப் போராட்டம் வெற்றி பெறுமல் போனால் அடுத்த கட்டமாக தீவிரப் போராட்டம்பற்றி சிந்திக்கவேண்டி வரும்.

பிறநாட்டுப் படைகளை விரட்டியடிக்க ஆயுதப் போராட்டமே வழி என்று வரலாறு நிரூபித்துள்ளது-என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சந்திப்பு

இந்திய அமைதிப்படைத் தளபதி ஜெனரல் ஏ எஸ் கல்கத் நேற்று திருகோணமலையில் வடக்கு — கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாளைச் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் பேச்சுக்கள் நடத்தினார். (இ-எ)

திருமலை......

னர்களுக்கும் தெரியாமல் ஈரோஸ் இயக்கத்திற்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டது பற்றியும் ஆராயப்பட்டது.

அதிகாரப் பரவலாக்கல் என்பது உள்நாட்டுப் பிரச்சினை என்றும், இதில் ஏன் இந்தியா தலையிட வேண்டுமெனவும் திரு. ரஞ்சன் விஜயரத்ன வினவியதற்கு, இந்தியா இப்பிரச்சினையில் தலையிட்டு எமக்கு உத்தரவாதமளித்தது. எனவே இப்பிரச்சினையில் இந்தியா பங்குகொள்ளவேண்டுமென ஈ. பி. ஆர். எல் எவ். குழுவினரால் வலியுறுத்தப்பட்டது.

ஈ. பி. ஆர். எல். எவ். நாடாளுமன்ற உறுப்பினர்களின் தற்பாதுகாப்பிற்கான ஆயுதங்களைத் தருவதோடு, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்வதாக அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன கூறினார்.

இப் பேச்சுவார்த்தைகளில் அமைச்சர்களான காமினி திஸாநாயக்காவும், எஸ் தொண்டமானும் மிகவும் கரிசனையுடையவர்களாகக் காணப்பட்டனர் - என்று உள்ளது.

பிரேமாவின்..:.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தை அமுல் நடத்தும் வகையில் அமைதிப்படையை தன்னிச்சையாக வாபஸ் வாங்கும் கால அட்டவணை ஒன்றை இந்தியா தாயரித்து வருவதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-எ)

ஸ்ரீலங்கா ராணுவத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கியவர்கள்

தங்கத்துரை, குட்டிமணிக்கு ரெலோ அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 25

அன்று எம் மண்ணில் ஸ்ரீலங்கா பாசிச அரசின் ஒடுக்கு முறையிலிருந்து விடுபடுவதற்கு அஹிம்சை முறையைக் கடைப்பிடித்தார்கள்.

இதற்கு முகம்கொடுக்க முடியாது ஸ்ரீலங்கா அரசு ஆயுதங்களைப் பயன்படுத்தியது. இதனை எதிர்த்து ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியவர்கள் தான் தேச பிதா தங்கத்துரை, தளபதி குட்டிமணி, ஜெகன் தேவன், நடேசதாசன். இப்படியான 53 போராளிகள் வெலிக்கடைச் சிறையில் காடையர் கூட்டத்தினால் அழிக்கப்பட்டனர்.

வெலிக்கடைப் படுகொலைகளின் 6 ஆம் ஆண்டு நிறைவையொட்டி தமிழ் ஈழ விடுதலை இயக்கம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எந்த நோக்குடன் தமது வாழ்வைச் சிறைக் கூடத்தில் இவர்கள் இழந்தார்களோ அந்த நோக்கம் இன்று கூட நிறைவேறவில்லை.

எம்மவர்கள் மத்தியில் ஒற்றுமை, விழிப்புணர்வு, சமாதானம் ஏற்படும் வரையும்—

நான் என்ற அகங்காரம் இருக்கும்வரையும் நோக்கம் நிறைவேறப்போவதில்லை.

இந்த நிலையில் உள்ளவர்கள் எம்மண்ணில் இருக்கும் வரை எம் தமிழ் இனம் பெரியார்களையும், தலைவர்களையும் இழக்க நேரிடும்.

-இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருகேயின் இறுதிச் சடங்கு

கொழும்பு ஜூலை 25

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினதும் சுதந்திர தொலைக்காட்சி அமைப்பினதும் தலைவரான திரு. டெனிஸ் குருகேயின் இறுதிச் சடங்குகள் நாளை புதன்கிழமை கனத்தை மயானத்தில் இடம் பெறும். (இ)

அறிவித்தல்

ஷப்ரு

24-7-89இல் இருந்து வாடிக்கையாளரின் நலனுக்காகக் காலை 9 மணிமுதல் மாலை 2-30 மணிவரை எமது அலுவலகம் பணக் கொடுக்கல் வாங்கல்களுக்காகத் திறந்திருக்கும் என்பதனையும், உணவு இடைவேளைக்காக அலுவலகம் மூடப்படாது என்பதனையும் அறியத்தருகிறோம்.

சனிக்கிழமைகளில் வழமைபோல் காலை 9 மணி முதல் 11-30 வரை அலுவலகம் திறந்திருக்கும்.

ஷப்ரு யுனிக்கோ (F)பினான்ஸ் லிமிட்டெட்,
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C 3095)

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கந்தசாமி
பிரேமசந்திரகுமார்
(Msc பொறியியலாளர்)

தோற்றம்:
11 - 11 - 1949
மறைவு:
25 - 07 - 1983

நீர் மறைந்து ஆண்டுகள் ஆறுகினாலும் எம் நெஞ்சம் நீறாக வேகுதே!

உன் ஆத்மா சாந்தி அடையட்டும்.

உம் பிரிவால் என்றும் துயருறும்:
— அன்புப் பெற்றோர்

122, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

[11585]

அதிகாரப் பரவலாக்கல்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சனைகளையும் தமக்கு தயாரித்து தரும்படி கேட்டுக்கொண்டார்.

உத்தேச ஆலோசனைகளை இரண்டு அல்லது மூன்று நாட்களில் தயாரித்துத் தர இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

★ திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்.
★ மலையக மக்களின் வாழ்வுரிமை.
★ அரசாங்க நிர்வாகம்
★ ஆயுதப்படைகள் —

ஆகிய விடயங்களில் சிங்கள மேலாதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் —

இவற்றுக்குத் தீர்வு கண்டால் இனப்பிரச்சினை சுலபமாகத் தீர்க்கப்பட்டு விடும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டதாம்.

இவை குறித்தும் சாதகமான பதில் தெரிவிக்கப்பட்டதாம். இதற்கும் முன்மொழிவுகள் கோரப்பட்டது.

ஆலோசனைகளைப் பெற்று பரிசீலித்ததும் அமைச்சர்கள் மூவரும் எதிர்வரும் 29ஆம் திகதி புதுடில்லி சென்று பேச்சு நடத்தக்கூடும் என நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறிய வந்தது.

இதேவேளை —

வடக்கு - கிழக்கு மாகாண அரசுக்கான அதிகாரங்களை வழங்குவது சம்பந்தமான புதிய திட்டம் ஒன்று விரைவில் வகுக்கப்படும் என்று வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் திருகோணமலையில் நேற்றுத் தெரிவித்ததாக இந்தியத் தரப்பில் கூறப்பட்டது.

இலங்கை அமைச்சர்கள் மூவருடன் நடத்திய சந்திப்பின் பிறகு திரு. வரதராஜப்பெருமாள் முன்கண்ட தகவலை வெளியிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாகாண அரசுக்கு அதிகாரப் பகிர்வு செய்யும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதாக இல்லை. அதனால் அதிகாரப் பகிர்வு குறித்து புதிய பேச்சுக்கள் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

அதிகாரப் பகிர்வு குறித்த பேச்சுவார்த்தைகளில் இந்தியாவும் பங்குகொள்ளும் என்று இன்று இருதரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது — என்றும் திரு. வரதராஜப்பெருமாள் கூறியிருந்தாராம். (அ-எ-உ-5

மின் விநியோக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்று மின்சார சபை வட்டாரங்கள் நேற்று கொழும்பில் தெரிவித்தன. மின் கோபுரங்களை திருத்துவதற்கான வசதி வாய்ப்புகளைப் பொறுத்து மூன்றுவார காலத்துக்கு மேலும் நீடிக்க கூடும் எனவும் அதே வட்டாரங்கள் கூறின. (அ

அமைதிப்படை ....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக புதுடில்லி அரசு வட்டாரங்கள் கருதுகின்றன.

தனது நிலையை ஏற்றுக் கொள்ளாவிட்டால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ரத்துச் செய்யப்போவது என்ற பயமுறுத்தல் ஜனாதிபதியின் கடிதத்தில் இருப்பதாக இந்திய அரசு வட்டாரங்கள் கருதுகின்றன.

மோதலுக்குத் தயாராகின்றாரா? அல்லது இணக்கத்துக்கு உடன்படுவாரா? என்பது பற்றிய தெளிவு ஜனாதிபதி பிரேமதாஸாவின் கடிதத்தில் காணப்படவில்லை என்றும் புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

மரண அறிவித்தல்கள்

திருமதி சிவஞானவதி சுப்பிரமணியம்

(வறுத்தலைவிளான், தெல்லிப்பளை)

திருமதி சிவஞானவதி சுப்பிரமணியம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. கதிரித்தம்பி சுப்பிரமணியம் (Retired Station Master) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி குகஞானவதி திருச்செல்வம், குணஞானவதி குலசிங்கம் (M L T G H Jaffna), குலஞானவதி மகாலிங்கம், செந்தில்ஞானவதி சிவலிங்கம் (Pharmacist, Chest Hospital, Welisara), காலஞ்சென்ற குகஞானலிங்கம், கெஜஞானவதி இராசசிங்கம் (Pharmacist. G. H., Jaffna), மகாஞானவதி சண்பகசுந்தரம் ஆகியோரது அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-07-1989 இன்று பிற்பகல் 1-00 மணியளவில் கோவில் ஒழுங்கை, வறுத்தலைவிளானில் நடைபெறும் என்பதை உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல் :

திருமதி செந்தில்ஞானவதி சிவலிங்கம்

கோவில் ஒழுங்கை,
வறுத்தலைவிளான், தெல்லிப்பளை.

(11613)

திரு இளையதம்பி தம்பிராஜா

திரு.இளையதம்பி தம்பிராஜா அவர்கள் காலமானார்.

அன்னார் நேசம்மாவின் அன்புக் கணவரும், கமலா தம்பிராஜா (ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் முன்னாள் செய்தி வாசிப்பவர், வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் உதவி ஆசிரியர், தற்போது கனடாவில் வசிப்பவர்), ஜெகநாதன் (வசந்தன் ரேணிங் வேக்ஸ் முன்னாள் உரிமையாளர், தற்போது ஜேர்மனியில் வசிப்பவர்), மகேந்திரன் (பிறவுண்ஸ் குறூப் முன்னாள் Junior-Executive), கங்காதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தா, துஷாந்தி (கொழும்பு), ரேணுகா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீபா, பிரபாகரன், பிரதீதா, பிரவீணா, சுலக்ஷி ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி நாகமணி இராசம்மாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-7-89 (புதன் கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:

த. கங்காதரன்.

பாடசாலை ஒழுங்கை,
வண் - வட - மேற்கு.
ஆனைக்கோட்டை.

(11614)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 - 07 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.